(Chapter XXII code of Crl. Procedure)
In the Court of III Addl. District and Sessions Judge,
Tirupattur, Vlr. Dt.

| | | |
|---|---|---|
| **Civil Cases** | : | **MCOP.1/2018** |
| Deposition of witness of | : | **R.W.2** |
| Name | : | **வரதன்** |
| Father's Name | : | கண்ணன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 21.02.2019 சாட்சி ஆஜர் சத்திய பிரமாணம் பெறப்பட்டு விசாரிக்க அனுமதிக்கப்பட்டார்.

**முதல் விசாரணை :**

நான் வேலூர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்ததால், ஆஜராகியுள்ளேன். ஹரிஷ்குமார், த/பெ.ஜெயகுமார், அண்ணா நகர், மலைக்கோடி, அரியூர், வேலூர் மாவட்டம் என்பவரின் ஓட்டுநர் உரிமம் குறித்து சாட்சியமளிக்க அழைப்பாணை வந்தது. 18.10.2017-ல் மேற்படி நபருக்கு ஓட்டுநர் உரிமம் எங்கள் அலுவலகத்தில் வழங்கப்படவில்லை. மேற்படி விலாசத்தில் உள்ள நபர் ஓட்டுநர் உரிமம் பெற வேண்டும் என்றால், எங்கள் அலுவலகத்தில்தான் பெற வேண்டும். ஆனால் அவர் எங்கள் அலுவலகத்தில் மனு செய்து உரிமம் எதுவும் பெறவில்லை. அதற்கான அறிக்கை **எ.ம.சா.ஆ7**. இன்றுவரை 18 வயது பூர்த்தியானவர்களுக்கு மட்டுமே ஓட்டுநர் உரிமம் வழங்கி வருகிறோம். தற்போது 16 வயது பூர்த்தியானவர்களுக்கே ஓட்டுநர் உரிமம் தரலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால் இன்னும் அமுலுக்கு வரவில்லை, அதனால் இன்னும் கொடுக்க ஆரம்பிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை :**

மேற்படி ஹரீஷ்குமார் வேறு முகவரியில் இருந்துகொண்டு, வேறு ஆர்.டி.ஓ. அலுவலகத்தில் ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால், அதுபற்றி எனக்கு தெரிய வராது என்றால், சரிதான். 2006-லிருந்து எங்கள் அலுவலகம் computerized ஆகிவிட்டது, 2006-லிருந்து ஆன்லைனின் பார்த்தேன், உரிமம் எதுவும் வழங்கப்படவில்லை. அதற்கு முந்தைய பதிவேடுகள் எதையும் நான் பார்க்கவில்லை. மேற்படி ஹரீஷ்குமாருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் உள்ளது என்றாலும், நான் ஆவணங்களை சரியாக பரிசீலிக்காமல் சாட்சியமளிக்கிறேன் என்றாலும், சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**